மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, கொண்டையன் தெருவில் முதன்மை அங்கன்வாடி மையம் 25–2–2010 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சர்வே எண் 532-ல் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்குக் கட்டடம் கட்ட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று, விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத்தில் அன்னமிட்டு, பள்ளியில் பந்தியிட்டு, விலையில்லா அரிசி தந்து, ஏழைகளின் முகத்தில் நிரந்தர சிரிப்பைத் தந்த தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) அகிலமும் வணங்கும் தெய்வம் நீங்களே. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, நன்றியைக் கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

மாணவர் விடுதி

***21306—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம், ராஜாமடம் ஊராட்சியிலுள்ள அரசு பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியான பட்டுக்கோட்டை, ராஜாமடம் என்னும் இடத்திலுள்ள பொறியியல் கல்லூரி விடுதிக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 12—2—2014 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு செய்ததற்காக அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்தக் கல்லூரி பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள இ.சி.ஆர். என்று சொல்லக்கூடிய கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்திருக்கக்கூடிய காரணத்தினால், அதிகமான வாகனங்கள் இந்தப் பகுதியில் சென்றுகொண்டிருக்கின்றன. அந்தக் கல்லூரியின் முன்புறம் சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கின்றது. அதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன். அதைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்லூரிகளின் Regional Centres மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காகவும், விடுதிகள் கட்டுவதற்காகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்த 150 கோடி ரூபாயில்தான் நாங்கள்

சொந்த கல்லூரிக்கும் விடுதி கட்டுவதற்காக 30 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதோடு சேர்த்து இதுபோன்று சுற்றுச் சுவர் இல்லாத பகுதிகளுக்கும், குடிநீர் வசதி இல்லாத பகுதிகளுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேலும் 10 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள். அந்த நிதியிலிருந்து சுற்றுச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியார் உறுப்புக் கல்லூரியான அரசு கலைக் கல்லூரிக்கு பாட வகுப்புகள் தொடங்கப்பட்டு ஏற்கெனவே ஒரு செட் மாணவர்கள் படித்து முடித்து விட்டுச் சென்று விட்டார்கள். நான்காம் வருடம் துவங்கியுள்ள இந்த நேரத்தில் தங்கும் விடுதி இல்லாத காரணத்தினால் வெளி கிராமங்களிலிருந்தும், மலைக் கிராமங்களிலிருந்தும் வந்து படிக்கும் மாணவியர்கள் தங்கள் படிப்பைப் பாதியிலே நிறுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வியாண்டிலாவது புதியதாக, பெரியார் உறுப்புக் கலைக் கல்லூரியான அரூர் அரசு கலைக் கல்லூரியில் படிக்கும் மாணவியருக்கு விடுதி கட்டித் தர முன் வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு நான்கு கல்லூரிகளை இந்த மாவட்டத்திற்குத் தந்து பெருமை சேர்த்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

தருமபுரி மாவட்டம், கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்ற நிலை மாறி கல்வியிலே உயர்ந்து வருகிற மாவட்டமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் உள்ள அடித்தட்டு மாணவ, மாணவியர் அனைவரும் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் நான்கு கல்லூரிகளைத் தொடங்கி பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதில் ஒன்று, நாங்கள் சார்ந்திருக்கிற அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியார் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். அதற்கு நிலம் வகைப்படுத்த வேண்டும் என்பது மிகப் பெரிய விஷயமாகும். அதற்காக வனத் துறையிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தி, இப்போது கட்டடம் கட்டுவதற்கான பணிகள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பெரு முயற்சியால் நடைபெற்று வருகின்றன என்பதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அங்கே விடுதி கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அது பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி என்பதால், ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக விடுதி கட்டுவது குறித்து எதிர்காலத்தில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ஏ.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூரில் இருக்கக்கூடிய அரசு பொறியியல் கல்லூரி கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதில் இருக்கக்கூடிய மாணவியர் விடுதி கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால், மாணவர்களுக்கான விடுதி இன்னும் கட்டி முடிக்கப்படாமல், அதற்கான பணிகள் முழுமை பெறாமல் உள்ளன. எனவே, மாணவர்களுக்கான விடுதியை உடனடியாகக் கட்டித் தர வேண்டும். அதோடு அந்தக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கின்றது. அதனையும் உடனடியாகக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் உள்ள அண்ணா பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக வரும்போது, கல்லூரிக்கான கட்டடப் பணிகள் நடைபெறாமல் இருந்தன. அதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கித் தந்து, கல்லூரிக்கான கட்டடம் கட்டப்பட்டு, தற்போது மாணவ, மாணவியர் படித்து வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதிக்குக் கட்டடம் வேண்டுமென கேட்டுள்ளார்கள். மாவட்ட கட்டட மையத்தின் மூலமாக அங்கே விடுதிகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. இப்போது அந்தப் பணிகள் முடியிற நிலையில் உள்ளன. மாணவியர் தங்கிப் படிப்பதற்கான விடுதி கட்டப்பட வேண்டுமென்றும் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதனை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.*

திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகாலமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குக் கூடுதலான பாடப் பிரிவுகளை வழங்கியிருக்கின்றார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில், சிவகங்கையில் இருக்கக்கூடிய அரசு மகளிர் கலைக் கல்லூரி, மன்னர் துரைசிங்கம் அரசு இருபாலர் கல்லூரி இரண்டுக்கும் Ph.D. வரை கூடுதலான பாடப் பிரிவுகளை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், போதுமான வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், அடிப்படை வசதிகள் இல்லாமல் மாணவ, மாணவியர் சிரமப்படுகிறார்கள். என்றைக்கும் இல்லாத அளவிற்கு, ஒவ்வொரு கல்லூரியிலும் எல்லா பாடப் பிரிவுகளிலும், அதிகமான மாணவ, மாணவியர்*

விண்ணப்பித்து, சேர்க்கை நடைபெறுகின்ற இந்த நேரத்தில், இந்த ஆண்டாவது அடிப்படை வசதிகளான வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் கட்டித் தரப்படுமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பொறியியல் கல்லூரிகளை விட, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கை என்பது மிகவும் அதிகரித்து வருகிறது. அதை அறிந்துதான், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் ஏற்கெனவே இருந்த 62 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டதற்கிணங்கவும், கல்லூரி முதல்வர்கள் கோரிக்கை வைத்ததற்கிணங்கவும், மாணவ, மாணவியர் கோரிக்கை வைத்ததற்கிணங்கவும், இதுவரையில் கிட்டத்தட்ட 800 பாடப் பிரிவுகளை கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையில், இந்த ஆண்டுகூட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெங்கு பாடப் பிரிவுகள் தொடங்கப்பட வேண்டுமோ அந்த இடங்களில் கூடுதல் பாடப் பிரிவுகளைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கூடுதல் பாடப் பிரிவுகளைக் கொடுக்கிறபோது, கட்டடங்கள் தேவைப்படுகின்றன. அந்தவகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் 37 கல்லூரிகளை அறிவித்திருப்பதன் காரணமாக, ஒவ்வொரு கல்லூரிக்கும் 7½ கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கித் தந்து, வரலாற்றிலே இல்லாத அளவிற்குக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, அரசு ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான தொழில் முனைப்பு வளர்ச்சி மையத்தை (Incubation Centre) எனது விருதுநகர் தொகுதியில் உள்ள அரசு உதவிபெறும் V.V.V. மகளிர் கல்லூரியில் வரும் வருடத்தில் அமைத்திட அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. மூலக் கேள்வி, விடுதி கட்டடம் தொடர்பானது. அது சம்பந்தமான வினா தொடுக்கும்போது மாண்புமிகு உறுப்பினருக்குத் தக்க பதில் அளிக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

பேருந்து மேற்கூரை கட்டுமான மையம்

*25003—**திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி மண்டலத்திலுள்ள பேருந்து மேற்கூரை கட்டுமான மையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டம், காரைக்குடி மண்டலத்திற்கென காரைக்குடியில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு ஆண்டு ஒன்றுக்கு 60 முதல் 100 அடிச்சட்டங்கள் வரை கூண்டு கட்டும் வகையில்